1988.09.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி வீடு மற்றும் கட்டிடத்துறை கௌரவ அமைச்சரால் தெரிவிக்கப்பட்டிருப்பது அங்கீகரிக்கப்பட்ட துணை விதியின் சட்டவாக்கத்தின் 36 ஆவது பகுதியின் கீழ், கீழே குறிப்பிட்ட நூல் நிலைய கட்டணம் அறவிடுவது உகந்தது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

(i) நூல் நிலைய வைப்பு

| | | |
|---|---|---|
| சிறுவர் | - | ரூபா 50.00 |
| வயதுவந்தோர் | - | ரூபா 75.00 |

(ii) புத்தகத்தை மீண்டும் ஒப்படைக்க வேண்டிய திகதிக்கு மேற்படும் ஒவ்வொரு நாளுக்கும் பின்வரும் தண்டப் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| சிறுவர் | - | ரூபா 1.00 |
| வயதுவந்தோர் | - | ரூபா 2.00 |

இதற்கு மேலதிகமாக

(i) ஒவ்வொரு வருடமும் நூல் நிலைய அங்கத்துவத்தை புதுப்பித்தல் கட்டணமாக ரூபா 30.00 தொகை 2022.01.01 ஆந் திகதியிலிருந்து செலுத்த வேண்டும்.

(ii) அங்கத்துவ விண்ணப்பப்பத்திர கட்டணமாக 2022.01.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 30.00 தொகை அறவிடப்படும்.

(iii) சேதத்திற்காக

(அ) புத்தகத்தில் கிறுக்கு செய்தல் எழுதல் ரூபா 30.00

(ஆ) புத்தகத்தை கிழித்தல் பக்கம் கழற்றல் ரூபா 100.00

(இ) பாவனைக்கு எடுக்க முடியாதவாறு சேதப்படுத்தல் அந்தப் புத்தகத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுவதற்கான செலவை ஏற்க வேண்டும்.

(ஈ) புத்தகத்தை காணாமல் செய்தால் அந்தப் புத்தகத்தை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கான செலவை ஏற்க வேண்டும்.

11- 380/13

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

கட்டிடம் கட்டுவதற்கான கட்டணம் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு யக்கலமுல்லை பிரதேச சபை கட்டிடம் கட்டுவதற்கான கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபை கூட்டத்தின் இலக்கம் 5: 14 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் இலக்கம் 31 அல்லது 78 ஆவது பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2022.01.01 ஆந் திகதியிலிருந்து யக்கலமுல்ல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கட்டிடம் கட்டுதல் அல்லது அனுமதி இல்லாமல் கட்டுவதற்காக கீழே குறிப்பிட்ட கட்டணம் அறவிடுவது உகந்தது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

(i) விண்ணப்பக் கட்டணம் ரூபா 500.00

(ii) பெரசேரி கட்டணம்

| | வதிவிடம் ரூபா | வியாபாரம் ரூபா |
|---|---|---|
| (அ) சதுர அடி 1-750 | 750.00 | 2000.00 |
| (ஆ) சதுர அடி 751-1500 | 2000.00 | 3500.00 |
| (இ) சதுர அடி 1501 -2500 | 5000.00 | 8500.00 |
| (ஈ) சதுர அடி 2501-3500 | 5500.00 | 10,000.00 |
| (உ) சதுர அடி 3501 - 5000 | 7500.00 | 20,000.00 |
| (ஊ) சதுர அடி 5001- 10000 | 9500.00 | 30,000.00 |
| (எ) சதுர அடி 10001- 15000 | 11500.00 | 40000.00 |
| (ஏ) சதுர அடி 15001- 20000 | 13500.00 | 50000.00 |
| (ஒ) சதுர அடி 20001 இலிருந்து மேல் | 15500.00 | 75000.00 |

மேலும் கட்டிடத்தின் வடிவமைப்பு அங்கீகாரம் செய்வதற்கு முன் கட்டுவதை ஆரம்பித்திருந்தால் பின்வரும் கட்டணம் அறவிடப்படும்.

| கட்டுவதன் கட்டம் | கீழ் மாடி (1 சதுர மீற்றருக்கு அல்லது பகுதிக்காக) | | ஒவ்வொரு மேல்மாடிக்கு (1 சதுர மீற்றருக்கு அல்லது பகுதிக்காக) | |
|---|---|---|---|---|
| | வதிவிட | வியாபாரம் | வதிவிட | வியாபாரம் |
| (i) அத்திவாரம் வேலை மாத்திரம் பூர்த்திசெய்து இருந்தால் (கயிறு மட்டம்) | 50.00 | 350.00 | 50.00 | 350.00 |
| (ii) கூரை மட்டம் வரை கட்டி இருந்தால் (கூரை வரை) | 150.00 | 400.00 | 150.00 | 400.00 |
| (iii) கூரையுடன் கட்டி இருந்தால் | 200.00 | 475.00 | 200.00 | 475.00 |
| (iv) முழுமையாக கட்டி இருந்தால் | 300.00 | 600.00 | 300.00 | 600.00 |

11-380/14

---

## யக்கலமுல்லை பிரதேச சபை

துண்டு வடிவமைப்பு அங்கீகரித்தல் அல்லது காணி விற்பனை மூலம் வரிவிதித்தல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2020 ஆம் ஆண்டுக்கு துண்டு வடிவமைப்பு அங்கீகரித்தல் அல்லது காணி விற்பனை மூலம் கட்டணம் அறவிடுவது தொடர்பாக 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபை கூட்டத்தின் இலக்க 5: 15 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யு. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

### தீர்மானம்

யக்கலமுல்ல பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு உரிய காணி துண்டு அனுமதி கொடுப்பதோடு அல்லது காணி துண்டாக பிரித்து விற்பனை செய்யும் போது அதற்கு ஏற்ப பின்வரும் கட்டணம் 2022.01.01 ஆந் திகதியிலிருந்து அறவிடுவதற்கு தீர்மானம் செய்யப்பட்டது.

**துண்டு வடிவமைப்பு அனுமதித்தல்**

- விண்ணப்பக் கட்டணம் ரூபா 750.00
- காணித் துண்டு அனுமதி அளிக்கும் போது பின்வரும் பரிசோதனைக் கட்டணம் நிலையான கட்டணம் ரூபா 1500.00 மாக அறவிடப்படும்.
- பொது ஏல விற்பனை மூலம் காணி விற்பனை செய்யாத சந்தர்ப்பத்தில் என்றாலும் காணி துண்டாக பிரிக்கும் சந்தர்ப்பத்தில் பின்வரும் பரிசீலனைக் கட்டணத்துடன் ரூபா 2500.00 நிலையான கட்டணம் ஒன்று செலுத்த வேண்டும்.
- சம்பூர்ண காணி அனுமதி அளிக்கும் போது அறவிடும் பரிசீலனைக்கட்டணம் பின்வருமாறு

1. பர்சஸ் 20 அல்லது 20 பர்சஸ்க்கு குறைந்த காணிக்காக - நிலையான கட்டணம் மாத்திரம்
2. பர்சஸ் 20க்கு மேல் றூட் 02க்கு அல்லது றூட் 02க்கு குறைந்த காணிக்காக நிலையான கட்டணம் உடன் ரூபா 2500.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
3. றூட் 02க்கு மேல் ஏக்கர் மற்றும் ஏக்கருக்கு குறைந்த காணிக்காக நிலையான கட்டணம் உடன் ரூபா 3,500.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
4. ஏக்கருக்கு மேல் ஏக்கர் 02 அல்லது ஏக்கர் 02 க்கு குறைந்த காணிக்காக நிலையான கட்டணம் உடன் ரூபா 4,000.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
5. ஏக்கருக்கு 02 இற்கு மேல் ஏக்கர் 05 அல்லது ஏக்கர் 05 இக்கு குறைந்த காணிக்காக நிலையான கட்டணம் உடன் ரூபா 3,000.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
6. ஏக்கர் 05 இற்கு மேல் ஏக்கர் 10 அல்லது ஏக்கர் 10 க்கு குறைந்த காணிக்காக நிலையான கட்டணம் உடன் ரூபா 4,000.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
7. ஏக்கர் 10இற்கு மேல் அனைத்து ஏக்கருக்கும் அல்லது பகுதிக்கு ஏக்கர் அல்லது பகுதிக்கு நிலையான கட்டணம் உடன் 5,000.00 கட்டணம் செலுத்த வேண்டும்.
3. பிரசித்தி பெற்ற காணி துண்டாக பிரித்து விற்பனை செய்யும் போது வடிவமைப்பு தனி துண்டுக்கு அதிகமான சந்தர்ப்பத்தில் நிலையான கட்டணத்துடன் ஒரு துண்டுக்கு ரூபா 1000.00படி உடன் ரூபா 10,000.00 கட்டணம் செலுத்த வேண்டும்.

11-380/15

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

நீர்த் தாங்கி பெற்றுக் கொடுப்பதற்கான கட்டணம் அறவிடல் - 2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான நீர் தாங்கி பெற்றுக் கொடுப்பதற்கான கட்டணம் அறவிடுவது தொடர்பாக 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபை கூட்டத்தின் இலக்கம் 5: 16 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான லீற்றர் 2000 நீர் கன அளவுடைய நீர் தாங்கிக்காக 2022, சனவரி 01 ஆந் திகதி இருந்து பின்வரும் கட்டணம் அறவிடுவது கௌரவ சபை தீர்மானம் செய்யப்பட்டது.

லீற்றர் 2000 கன அளவுடைய நீர் தாங்கி டெக்டர் உடன்

**ஒரு நாளைக்கு**

| | | | |
|---|---|---|---|
| 1. | நீர் இன்றி தாங்கி மாத்திரம் | ரூபா | 500.00 |
| 2. | மேலதிமமாக வைத்துக் கொள்ளும் ஒரு தினத்திற்கு | ரூபா | 50.00 |
| 3. | ஒரு தினத்திற்கு நீருடன் தாங்கி | ரூபா | 1000.00 |
| 4. | மேலதிகமாக வைத்துக் கொள்ளும் ஒரு தினத்திற்கு | ரூபா | 50.00 |

11- 380/16

---

## யக்கலமுல்லை பிரதேச சபை

கொன்கிரீட் கலப்பு இயந்திரம் வாடகைக்கு கொடுக்க கட்டணம் அறவிடல் - 2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு கொன்கிரீட் கலப்பு இயந்திரம் வாடகைக்கு கொடுப்பதற்காக கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபை கூட்டத்தின் இலக்கம் 5: 17 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

### தீர்மானம்

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான கொன்கிரீட் கலப்பு இயந்திரம் 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து வாடகைக்கு கொடுப்பதற்கு பின்வரும் கட்டணம் அறவிடுவது என தீர்மானம் செய்யப்பட்டது.

1. கொன்கிரீட் கலப்பு இயந்திரம் ஒரு தினத்திற்காக ரூபா 4700.00
2. கொன்கிரீட் கலப்பு இயந்திரம் வாடகைக்கு கொடுக்கும் போது ரூபா 3000.00
   மீண்டும் கொடுக்கப்படும் வைப்புப் பணத் தொகை வைத்தல் வேண்டும்.

போக்குவரத்து கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. | கி. மீ. 00 இருந்து 05 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 1500.00 |
| 2. | கி. மீ. 06 இருந்து 10 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 2000.00 |
| 3. | கி. மீ. 11 இருந்து 20 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 2500.00 |
| 4. | கி. மீ. 20 இக்கு மேல் சகல கிலோ மீற்றருக்குமாக கட்டணம் அறவிடப்படும் | ரூபா 60.00 |

11-380/17

**யக்கலமுல்லை பிரதேச சபை**

(கொன்கிரீட் தர சோதனை அச்சு) வாடகைக்கு வழங்க கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு கொன்கிரீட் தர சோதனை அச்சு வாடகைக்கு கொடுப்பதற்கான கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக்கூட்டத்தின் இலக்கம் 5: 18 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான கொங்ரீட் தர சோதனை அச்சு 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து வாடகைக்கு கொடுப்பதற்காக பின்வரும் கட்டணம் அறவிடுவது என கௌரவ சபை தீர்மானம் செய்துள்ளது.

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான கொன்கிரீட் தரச் சோதனை 14 வாடகை கொடுப்பதற்காக பின்வரும் கட்டணம் அறவிடப்படும்.

1. கொன்கீரிட் தரசோதனை அச்சு ஒரு நாலுக்காக ரூபா. 500.00
2. அதற்கு மேலதிகமாக கொன்கீரிட் தர சோதனை அச்சுக்காக பின்வரும் மீண்டும் கொடுக்கப்படும் வைப்புப் பணம் தொகை வைத்தல் வேண்டும்
   கொன்கீரிட் தர சோதனை அச்சு 01-05 வரை வைப்புப் பணம் ரூ. 2000.00
   கொன்கீரிட் தர சோதனை அச்சு 05 க்கு மேற்படும் போது வைப்புப் பணம் ரூ. 4000.00
   மேலதிகமாக வைத்துக் கொள்ளும் ஒரு நாலுக்காக கொன்கீரிட் தர சோதனை அச்சு 01க்காக 500.00 தொகை அறவிடப்படும்.

11-380/18

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

கொடிக் கம்பம் வாடகைக்கு கொடுக்க கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான கொடிக் கம்பம் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்கம் 5: 19 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான கொடிக் கம்பம் 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து வாடகைக்கு கொடுப்பதற்காக பின்வரும் கட்டணம் அறவிடுவது உகந்தது என தீர்மானம் செய்யப்பட்டன.

1. சபைக்கு சொந்தமான கொடிக் கம்பம் வாடகைக்கு கொடுக்கும் போது ஒரு தினத்திற்கு கொடிக் கம்பத்திற்காக ரூபா 20.00 கட்டணம் அறவிடப்படும் அதற்கு மேலதிகமாக கொடிக் கம்பத்திற்காக மீண்டும் பெற்றுக் கொடுக்கும் வகையில் வைப்புப் தொகை வைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| • கம்பத்திற்கு 01 இருந்து 05 வரை வைப்பு தொகை | ரூபா 1000.00 |
| • கம்பத்திற்கு 06 இருந்து 10 வரை வைப்பு தொகை | ரூபா 2500.00 |
| •கம்பத்திற்கு 10 க்கு மேல் அதிகரிக்கும் போது வைப்பு தொகை | ரூபா 5000.00 |

போக்குவரத்து கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. | கி. மீ. 00 இருந்து 05 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 1000.00 |
| 2. | கி. மீ. 06 இருந்து 10 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 1500.00 |
| 3. | கி. மீ. 11 இருந்து 20 உட்பட்ட போக்குவரத்துக்காக | ரூபா 2000.00 |
| 4. | கி.மீ. 20க்கு மேல் சகல கிலோ மீற்றருக்குமாக கட்டணம் அறவிடப்படும் | ரூபா 40.00 |

11-380/19

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

ஆகாய விமானம் தரையில் இறக்குவதற்கு வரி அறவிடல் - 2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு ஆகாய விமானம் தரையில் இறக்குவதற்கு கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்க 5: 20 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான விளையாட்டுத் திடலுக்காக 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து தனியார் சபையின் கீழ் உள்ள ஆகாய விமானம் தரையில் இறக்குவதற்கு பின்வரும் கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானம் செய்யப்பட்டன.

தனியார் சபையின் கீழ் உள்ள ஆகாய விமானம் தரையில் இறக்குவதற்கு ஒரு முறைக்கு அறவிடும் கட்டணம் - ரூபா 5000.00

11 - 380/20

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

எல்லை சுற்று மதில் அல்லது பாதுகாப்பு அணைக் கரைக் கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு சுற்று மதில் அல்லது பாதுகாப்பு அணைக்கரைக் கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்கம் 5: 21 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபை 2022, சனவரி 1 ஆந் திகதி எல்லை சுற்று மதில் அல்லது பாதுகாப்பு அணை கரைக்கட்டுவதற்கான பின்வரும் கட்டணம் அறவிடுவது என தீர்மானம் செய்யப்பட்டது.

| எல்லை சுற்று மதில் | கட்டிய எல்லைக்கு அப்பால் | கட்டிய எல்லைக்குள் |
|---|---|---|
| இருப்பிட நீள மீற்றர் 01 க்கு | 300.00 | 500.00 |
| வியாபாரத்திற்கு அல்லது வேறு நீள மீற்றர் 01 க்கு | 400.00 | 600.00 |

11 - 380/21

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

நீர் பவுசர் பெற்றுக் கொடுப்பதற்கான கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2022 ஆம் ஆண்டுக்கு யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான நீர் பவுசர் வாடகைக்கு பெற்றுக் கொடுப்பதற்கான கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபை கூட்டத்தின் இலக்கம் 5: 22 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான 4000 லீற்றர் நீர் கன அளவுடைய நீர் பவுசருக்காக 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பின்வரும் கட்டணம் அறவிடுவது உகந்தது என தீர்மானம் செய்யப்பட்டது.

நீருடன் பவுஸர் பெற்றுக் கொடுத்தல் ஒரு நாளைக்கு

| | | |
|---|---|---|
| • நீர் உடன் | ரூபா 2000.00 | |
| • நீர் இன்றி | ரூபா 1500.00 | அறவிடப்படும் |

சபை அதிகார எல்லைக்கள் போக்குவரத்துக்கான ரூபா 500.00
அதிகார எல்லைக்கு அப்பால் போக்குவரத்துக்காக ரூபா 2000.00 தொகை அறவிடப்படும்.

11-380/22

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

08 டொன் உடைய பாதை செப்பனிடும் உருளை வாடகைக்கு கொடுப்பதற்கான கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபையால் 2020 ஆம் ஆண்டுக்கு யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான 08 டொன் உடைய பாதை செப்பனிடும் உருளை பெற்றுக் கொடுப்பதற்கான கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை

பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்க 5: 23 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை பிரதேச சபைக்கு சொந்தமான 08 டொன் உடைய பாதை செப்பனிடும் உருளைக்காக 2022, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பின்வரும் கட்டணம் அறவிடுவது உகந்தது என தீர்மானம் செய்யப்பட்டது.

* ஒரு நாளைக்காக ரூபா 10,000.00 தொகை அல்லது இதற்கு மேற்படியாக அதிகரிக்கும் எல்லா 1 மணித்தியாலத்திற்கும் ரூபா 1000.00 கட்டணம் அறவிடப்படும் (ஒரு நாளைக்கு 08 மணித்தியாலங்கள்)

* அதற்காக மீண்டும் பெற்றுக் கொடுக்கும் வைப்பு தொகையாக அதிகார எல்லைக்குள் ரூபா 10,000.00 தொகையை கி. மீ. 10க்கு அதிகமான தூரத்தில் இருக்கும் வேலை செய்யும் காணிக்கு கொண்டு செல்வதற்கு ரூபா 15,000.00 வைப்புத் தொகை அறவிடப்படும்.

* கல்ரோல் தொழில்நுட்ப பிழைகளினால் அல்லது சாரதி இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் நாட்களுக்கு மேலதிகமாக வேலைத்தளத்தில் வைத்திருக்கும் ஒரு நாளுக்கு ரூபா 2,000.00 தொகை அறவிடப்படும்.

**செப்பனிடும் உருளை போக்குவரத்துக்காக** பின்வரும் போக்குவரத்து கட்டணம் அறவிடப்படும்.

**போக்குவரத்து கட்டணம்**

1. கி. மீ. 00 இருந்து 05 உட்பட்ட போக்குவரத்துக்காக ரூபா 3500.00

கி. மீ. 05 உட்பட்ட மாத்திரம் மேற்குறிப்பிட்ட கட்டணத்தின் கீழ் போக்குவரத்து சபையால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் போக்குவரத்து வசதி தம்மால் நிறைவேற்றப்பட வேண்டும்.

11-380/23

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

தொலைபேசி கோபுரத்திற்காக கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தொலைபேசி கோபுரத்திற்காக 2022 ஆம் ஆண்டுக்கு கட்டணம் அறவிடுவதற்கு 2021.09.21 ஆந் திகதி நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்க 5: 24 இன் கீழ் பின்வரும் பிரேரனை சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

யக்கலமுல்லை அதிகார பிரதேசத்தில் நிறுவப்பட்ட தொலைபேசி கோபுரத்திற்காக 2022.01.01 ஆந் திகதியிலிருந்து ஆண்டுக்கு ரூபா 3,000.00 கட்டணம் அறவிட தீர்மானிக்கப்பட்டது

11-380/24

---

**யக்கலமுல்லை பிரதேச சபை**

பிரதேச சபைக்குரிய வீதி பயன்படுத்துவதற்கான கட்டணம் அறவிடல் -2022

யக்கலமுல்லை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பிரதேசத்திற்கு உரிய வீதி பயன்படுத்துவதற்கான கட்டணம் அறவிடுவது சம்பந்தமான 2021.09.21 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட யக்கலமுல்லை பிரதேச சபைக் கூட்டத்தின் இலக்கம் 5: 25 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

யூ. ஜீ. பியதாச,
தலைவர்,
யக்கலமுல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யக்கலமுல்லை,
2021, ஒற்றோபர் 11.

**தீர்மானம்**

10 மில்லியன் ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட திட்டத்திற்காக சபைக்குரிய வீதியை பயன்படுத்தினால் அந்த திட்டத்தின் முதல் மதிப்பீட்டு தொகையில் 1% தொகையை சபைக்கு வைப்பு செய்ய வேண்டும்.

11-380/25

---

**கந்தளாய் பிரதேச சபை**

ஆதன வரி அறவிடல் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) உப பிரிவின் படி கந்தளாய் பிரதேச சபை-க்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கந்தளாய் பிரதேச சபை 2021.10.26 ஆந் திகதிய முன்மொழிவு இலக்கம் 416 ஐ உடைய முன்மொழிவின் கீழ் பின்வரும் முன்மொழிவுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறியத்தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

**தீர்மானம்**

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆவது பிரிவின் (1) உபபிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அபிவிருத்தி

அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள சகல குடிமனைகள், கட்டடங்கள் மற்றும் குடிசைகள் ஆகியவற்றிற்கு 2020 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற 2008 ஆம் ஆண்டு செய்யப்பட்ட மதிப்பீட்டை 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பெறுமதியாக ஏற்றுக் கொள்வதெனவும்,

(ஆ) மேற்படி மதிப்பீட்டிற்கமைய 134 ஆவது பிரிவின் (1) ஆம் உபபிரிவில் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அபிவிருத்தி அடைந்த பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல அசையா ஆதனங்களின் வருடாந்த பெறுமதியில் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு 6% மற்றும் 12% ஆதனவரி விதித்து அறவிடுவதெனவும்,

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உபபிரிவில் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய மேற்படி ஆதனவரி 2022 ஆம் ஆண்டு மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடையும் 4 கந்தாயத்திற்குள் சமமான 4 தவணைகளில் பிரதேச சபைக்குச செலுத்துமாறும் ஆதன வரிக்கு உட்பட்ட சகல வரியிருப்பாளர்களுக்கும் ஆணையிடுவதென நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| **அதிகார எல்லை** | | | **வீதம்** |
|---|---|---|---|
| நகர சபை மாவத்தை | - | இடது (9-85) | 12% |
| நகர சபை மாவத்தை | - | வலது (12-94) | 12% |
| அப்துல் மஜீத் மாவத்தை | - | இடது (விசேடம் 9-59/2) | 12% |
| அப்துல் மஜீத் மாவத்தை | - | வலது (280/4-470) | 12% |
| ரஜ எல வீதி | - | இடது (19-57) | 12% |
| ரஜ எல வீதி | - | வலது(8-70) | 12% |
| சிவன் கோயில் வீதி | - | வலது (4-50) | 12% |
| ஜனதர்ம மாவத்தை | - | இடது (5-77) | 12% |
| ஜனதா மாவத்தை | - | வலது (4-78) | 12% |
| கெமுனு மாவத்தை | - | இடது(3-61) | 12% |
| கெமுனு மாவத்தை | - | வலது(4-76) | 12% |
| அக்ரபோதி மாவத்தை | - | இடது(311-615/1) | 12% |
| ஏரி வீதி | - | வலது(8-12) | 12% |
| திருகோணமலை வீதி | - | இடது | 12% |
| திருகோணமலை வீதி 2 ஆவது ஒழுங்கை | - | வலது | 12% |
| திருகோணமலை வீதி | - | வலது | 12% |
| பராக்கிரம மாவத்தை | - | இடது | 12% |
| கண்டி வீதி | - | இடது | 6% |
| கண்டி வீதி | - | வலது | 6% |
| அப்துல் மஜீத் மாவத்தை | - | இடது | 6% |
| சேருவில வீதி | - | இடது | 6% |
| சமகி மாவத்தை | - | வலது | 6% |
| சமகி மாவத்தை | - | இடது | 6% |
| பேராறு குறுக்குப்பாதை | - | வலது | 6% |
| திருகோணமலை வீதி | - | இடது | 6% |
| திருகோணமலை வீதி 2 ஆவது ஒழுங்கை | - | இடது | 6% |
| ஆரியவங்ச மாவத்தை | - | இடது(விசேடம்) | 6% |
| ஆரியவங்ச மாவத்தை | - | வலது(விசேடம்) | 6% |
| ஆரியவங்ச மாவத்தை | - | இடது | 6% |
| ஆரியவங்ச மாவத்தை | - | வலது | 6% |
| மீனவ கிராம வீதி | - | இடது | 6% |
| மீனவ கிராம வீதி | - | வலது | 6% |
| ஜனதா மாவத்தை | - | வலது | 6% |

| | | | |
|---|---|---|---|
| ஜனதா மாவத்தை | - | இடது | 6% |
| சேனாநாயக்க மாவத்தை | - | இடது | 6% |
| சேனாநாயக்க மாவத்தை | - | வலது | 6% |
| பாத்தியகம வீதி | - | இடது | 6% |
| பாத்தியகம வீதி | - | வலது | 6% |
| புகையிரத நிலைய வீதி | - | இடது | 6% |
| புதிய வீதி | - | இடது | 6% |
| புதிய வீதி | - | வலது | 6% |
| திருகோணமலை வீதி | - | வலது | 6% |

11- 332/1

---

## கந்தளாய் பிரதேச சபை

### தொழில் மீதான வரி அறவிடல் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆவது பிரிவின் (1) உபபிரிவிற்கமைய கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேச சபை 2021.10.26 ஆந் திகதிய முன்மொழிவு இலக்கம் 416 இன் முன்மொழிவின் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

### தீர்மானம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 152 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் சந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய மேற்படி சட்டத்தின், அச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துணை விதிகளின் தத்துவத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறல் அல்லது அச்சட்டத்தின் 150 ஆவது பிரிவின் கீழ் ஏதேனும் தொழில் வரியொன்றை செலுத்த தேவைப்படாததுமான ஏதேனும் வியாபாரமொன்றை கந்தளாய் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு நபர்களிடமிருந்தும் அவ்வியாபாரத்தின் 2021 ஆம் ஆண்டின் வருமானம் கீழ் அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டுள்ளவாறு வியாபார வரியாக 2022 ஆம் ஆண்டில் விதித்து அறவிடுவதற்கும்,

(ஆ) (3) உப பந்தியில் வழங்கப்பட்டள்ள அதிகாரங்களின் படி உட்பட்ட சகல நபரினாலும் மேற்படி வரியினை 2022.04.30 ஆந் திகதிக்கு முன் கந்தளாய் பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும், முன்மொழிவுகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென அறியத் தருகின்றேன்.

**அட்டவணை - I**

| 2021 ஆம் ஆண்டின் வருமானம் | ரூ. சதம் |
|---|---|
| ரூபா 6,000.00 இக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | இல்லை |
| ரூபா 6,000.00 இக்கு மேற்பட்ட ஆனால் ரூபா 12,000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 90.00 |
| ரூபா 12,000.00 இக்கு மேற்பட்ட ஆனால் ரூபா 18,750.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 180.00 |
| ரூபா 18,750.00 இக்கு மேற்பட்ட ஆனால் ரூபா 75,000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 360.00 |
| ரூபா 75,000.00 இக்கு மேற்பட்ட ஆனால் ரூபா 150,000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1200.00 |
| ரூபா 150,000.00 இக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் | 3000.00 |

**அட்டவணை** - II

01. அச்சுக்கூடம் ஒன்றை வைத்திருத்தல்
02. பித்தளை பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல்
03. ஆயுர்வேத மருந்தகம் ஒன்றை வைத்திருத்தல்
04. மேற்கத்தைய மருந்தகம் ஒன்றை வைத்திருத்தல்
05. பற்சிகிச்சை நிலையம் ஒன்றை வைத்திருத்தல்
06. காணி ஏலவிற்பனை அனுமதிப்பத்திரம் ஒன்றைப்பெறல்
07. கல் விற்பனை அனுமதிப் பத்திரம் ஒன்றைப்பெறல்
08. கல் மற்றும் ஓடு களஞ்சியப்படுத்தும் விற்பனை நிலையம் வைத்திருத்தல்
09. உபயோகப்படுத்திய ஆடைகள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
10. ஆபரணங்கள் தயாரித்தல், திருத்தம் செய்தல் மற்றும் விற்பனை
11. மரம் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்றல்
12. விறகு களஞ்சிய சாலை நடாத்துதல்
13. மொத்த வியாபாரம் (நிலைய முகவராக செயற்படல்)
14. வெற்றுப்போத்தல், வெற்றுச்சாக்கு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
15. உபயோகப்படுத்திய மற்றும் புதிய டயர் மற்றும் டியுப் விற்பனை
16. துவிச்சக்கர வண்டி (திருத்துமிடம்/திருத்தும் கடை) நடாத்துதல்
17. பிரம்பு பொருட்கள் உற்பத்தி நிலையம்
18. மிருக வைத்தியசாலை நடாத்துதல்
19. பழைய மற்றும் புதிய இரும்பு களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
20. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
21. கண்ணாடி பொருட்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
22. கண்ணாடி உபரணங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
23. பாதணி மற்றும் பை வகைகள் விற்பனை நிலையம் நடாத்துதல்
24. தையல் இயந்திரம் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
25. கணினி மற்றும் அதனுடன் தொடர்பான உதிரிப் பாகங்கள் விற்பனையும் திருத்தம் செய்தலும்
26. மூக்குக்கண்ணாடி விற்பனை நிலையம் நடாத்துதல்
27. ஒலிபெருக்கி விற்பனையும் வாடகைக்கு விடலும்
28. ஆடம்பரப்பொருள் விற்பனை நிலையம் நடாத்துதல்
29. மரப் பொருட்கள் விற்பனை
30. ஆடை விற்பனை நிலையம் நடாத்துதல்
31. கடிகாரம் விற்பனையும் திருத்தம் செய்தலும்
32. விஷேட மருத்துவ சேவை நிலையம் வைத்திருத்தல்
33. பதிவு செய்யப்பட்டதனியார் தபால் அலுவலகம் வைத்திருத்தல்
34. பதிவு செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் விற்பனை நிலையம் நடாத்துதல்
35. புத்தகங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
36. கணினி அச்சகம் மற்றும் அலகிடல் அச்சகம் நடாத்துதல்
37. தனியார் மேலதிக வகுப்பு நடாத்துதல்
38. மரக்கறி விதை விற்பனை நிலையம் நடாத்துதல்
39. வர்ண புகைப்பட ஆய்வு கூடம் நடாத்துதல்
40. புகைப்படம் எடுக்கும் ஆய்வு கூடம் நடாத்துதல்
41. மட்பாண்டப் பொருட்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
42. வைபவப் பொருட்கள் வாடகைக்கு விடும் நிலையம் நடாத்துதல்
43. வெற்றிலை, புகையிலை, பாக்கு விற்பனை செய்தல்
44. தேயிலை விற்பனை நிலையம் நடாத்துதல்
45. குதிரை பந்தயம் பொறுப்பேற்கும் நிலையம் வைத்திருத்தல்
46. ஜோதிட நிலையம் வைத்திருத்தல்
47. மணமகள் அலங்கார நிலையம் வைத்திருத்தல்
48. சாரதி பயிற்சி நிலையம் வைத்திருத்தல்

49. அலங்கார மீன்கள் விற்பனை நிலையம் நடாத்துதல்
50. விற்பனைக்காக அலங்காரப்பூக்கள் வைத்திருத்தல்
51. பிளாஸ்ரிக் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
52. தொலைபேசி சேவை, தொலைநகல் சேவை, இணைய சேவை, நிழற்பிரதி சேவை நிலையம் நடாத்துதல்
53. ஆயுர்வேத உள்நாட்டு மருந்து தயாரிப்பு மற்றும் கலவை தயாரிப்பு நிலையம் நடாத்துதல்
54. சகல வகையான புதிய வாகன விற்பனை
55. சகல விதமான திருத்தம் செய்யப்பட்ட பழைய வாகனங்கள் விற்பனை
56. உடல் வலுவூட்டும் நிலையம்
57. அரச அங்கீகாரம் பெற்ற அதிஷ்ட லாபச்சீட்டு விற்பனை நிலையம் நடாத்துதல்
58. கட்டிடப்பொருட்கள் விற்பனை
59. துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை
60. நடமாடும் வியாபாரம்
61. நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளும் நிலையம் நடாத்துதல்
62. அடகுப் பொருட்கள் பெற்றுக்கொள்ளும் நிலையம் நடாத்துதல்
63. டயர் விற்பனை நிலையம் நடாத்துதல்
64. வியாபார முன்னேற்ற நடவடிக்கைக்காக (நடமாடும் ஒலிபரப்புச் சேவை)
65. வர்ணப்பூச்சு விற்பனை
66. செல்லிடத்தொலைபேசி திருத்தும் இடம்
67. சங்கீத உபகரணங்கள் வாடகைக்கு விடும் நிலையம்
68. தரகு
69. தரகர்கள்
70. நிதி கடன் வழங்கும் நிறுவனங்கள்
71. ஒப்பந்தகாரர்கள்
72. அடகுப் பொருள் விற்பனை
73. வழங்குநர்கள்
74. காப்புறுதி முகவர்கள்
75. போக்குவரத்து முகவர்கள்
76. வாடகை வாகன உரிமையாளர்
77. மோட்டர் வாகன விற்பனை
78. வங்கி காப்புறுதி நிலையம் நடாத்துதல்
79. சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் நடாத்துதல்
80. அரசாங்க அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு குடிபானக் கடை நடாத்துதல்
81. பசளைக் கடை நடாத்துதல்
82. இறுதிச் சடங்கு சேவை வழங்கும் விற்பனை நிலையம்
83. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
84. சுப்பர் மார்கட் நடாத்துதல்

11-332/2

---

## கந்தளாய் பிரதேச சபை

### அனுமதிப் பத்திர கட்டணங்களை அறவிடல் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 147 ஆவது பிரிவின் கீழ் கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேச சபை 2021.10.26

ஆந் திகதிய தீர்மான இலக்கம் 416 இன் முன்மொழிவின் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆவது பிரிவிற்கமைய பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய மேற்படி சட்டத்தின் அச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துணை விதிகளில் விபரிக்கப்பட்ட கீழ் அட்டவணையில் குறிப்பிடப்படும் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காகவோ அல்லது அச்சட்டத்தின் 150 ஆவது பிரிவிற்கமைய ஏதாவது தொழில் வரி செலுத்தத் தேவையில்லாத வியாபரத்தை கந்தளாய் பிரதேச சபை பிரதேசத்திற்குள் 2022 ஆம் ஆண்டில் நடாத்திச் செல்ல வேண்டிய சகல ஆட்களிடமும் அவ்வியாபாரத்தின் 2021 ஆம் ஆண்டின் வருமானத்தின் படி இங்கு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறியத் தருகின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 01. | தானிய வகைகளும் அசைவ உணவுகள் 5 ஹெரண்டருக்கு மேல் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | சமையல் எரிவாயு விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | புகையிலை விற்பனை, களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | கோப்பி வகை, அசைவ உணவுகள், சுவைச்சரக்கு மற்றும் அரைக்கும் ஆலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | இலத்திரனியல் உலோக பூச்சிடல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | மின் தொழிற்சாலை மற்றும் வானொலி திருத்துமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| விரும்பத்தகாத வியாபாரம் | | | | |
| 01. | மீன் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | இறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| | (i) கோழி இறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| | (i) பன்றி இறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| | (i) மாட்டிறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | பால் பண்ணை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | இஸ்திரி போடும் இடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | 100 இற்கு மேற்பட்ட கோழிகளையுடைய கோழிப்பண்ணை | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | குளிரூட்டப்பட்ட இறைச்சி, மீன் களஞ்சியப்படுத்தல் அல்லது அப்பொருட்கள் மட்டும் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | | |
|---|---|---|---|
| *கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை* | *இடத்தின் வருடாந்தப் பெறுமதி* | | |
| | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| *வேறு* | | | |
| *01.* வெதுப்பகம் நடாத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *02.* உணவுச்சாலை நடாத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *03.* தேநீர், கோப்பிக் கடை நடத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *04.* உணவகமொன்றை நடாத்துதல் (ரெஸ்ட்டுரன்ட்) | *500.00* | *750.00* | *1000.00* |
| *05.* சிகையலங்காரம் | *500.00* | *750.00* | *1000.00* |
| *06.* மரக்கறி விற்பனை நிலையம் நடாத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *07.* பழங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *08.* இனிப்புப் பண்ட உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *09.* குளிர்பானம் உற்பத்தியும் விற்பனையும் | *500.00* | *750.00* | *1000.00* |
| *10.* பால் சேகரித்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது விற்பனை நிலையமொன்று நடாத்துதல் | *500.00* | *750.00* | *1000.00* |
| *11.* சுவைச்சரக்கு பொதி செய்தலும் விற்பனையும் | *500.00* | *750.00* | *1000.00* |
| *12.* விலங்குணவு களஞ்சியப்படுத்தலும் விற்பனையும் | *500.00* | *750.00* | *1000.00* |
| *13.* உணவு வகைகள் தயாரித்தல், பொதி செய்தல் நிலையமொன்று வைத்திருத்தல் | *500.00* | *750.00* | *1000.00* |



---

## கந்தளாய் பிரதேச சபை

தொழில் வரி அறவிடல் - *2022*

*1987* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆவது பிரிவின் *(1)* உபபிரிவிற்கமைய கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேச சபை *2021.10.26* ஆந் திகதிய தீர்மான இலக்கம் *416* தீர்மானத்தின் கீழ் காட்டப்படுள்ள ஆலோசனைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறியத் தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
*2021*, ஒற்றோபர் *26*.

**தீர்மானம்**

*(அ) 1987* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் *150* ஆவது பிரிவின் *(1)* உபபிரிவிற்கமைய உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கந்தளாய் பிரதேசக்குள் ஏதாவது இடத்தில் நடத்தப்பட்டு வரும் இங்கே கீழுள்ள அட்டவணை I ஆவது நிரலில் காண்பிக்கப்படும் சகல தொழில் தொடர்பாகவும் அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் காட்டப்படும் தொழில் வரி *2022* ஆண்டிற்காக விதித்து அறவிடப்படுவதெனவும்,

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆவது பிரிவின் (1) ஆம் உபபிரிவின் படி கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய வரிக்கு உட்படும் சகல ஆட்களினாலும் குறித்த வரி 2022.04.30 இற்கு திகதிக்கு முன்பதாக கந்தளாய் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் ஆலோசனைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கின்றேன்.

**அட்டவணை**

| I ஆம் நிரல்<br>2021 ஆம் ஆண்டின் வருமானம் | II ஆம் நிரல்<br>ரூ. சதம் |
|---|---|
| வருடாந்த பெறுமதி ரூ. 750.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 500.00 |
| ரூ. 750.00 இற்கு மேற்படும் ஆயினும் ரூ. 1,500.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750.00 |
| ரூ. 1,500.00 இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் | 1,000.00 |

01. இயந்திரம் மற்றும் இயந்திரமல்லாத மரமறுக்கும் ஆலை வைத்திருத்தல்
02. மோட்டர் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, முச்சக்கர வண்டி திருத்தும் நிலையம் வைத்திருத்தல்
03. மின்சாரம் மற்றும் எரிபொருள் மூலம் நெல் குற்றும் ஆலை மற்றும் அரிசி புடைத்தல்
04. தையல் நிலையம் வைத்திருத்தல்
05. காளான் வளர்ப்பு நிலையம் வைத்திருத்தல்
06. சீமெந்து உள்ளடங்கிய உற்பத்திகள்
07. தச்சுத்தொழிற்சாலை வைத்திருத்தல் (மர அலங்கார வேலை, தளபாடங்கள்)
08. ஒட்டுவேலை நிலையம் வைத்திருத்தல்
09. மட்பாண்ட தொடர்புடைய உற்பத்திகள் (கல், ஓடு மற்றும் மட்பாண்டப் பொருள்)
10. வாகனத்திற்கு விசிறும் வர்ணப்பூச்சு இடல் (ஸ்ப்ரே பெயின்ட்)
11. நீர் வாழ் உயிரினங்கள் வளர்ப்பு நிலையம் (இறால் மற்றும் அலங்கார மீன்)
12. கபொக் கல், கிரவல் கல், கருங்கல் அகழுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
13. மண் அகழுதல் மற்றும் விற்பனை நிலையம் வைத்திருத்தல்
14. கிரவல் அகழும் நிலையம் வைத்திருத்தல்
15. இயந்திரம் மூலம் கருங்கல் அரைத்தல்
16. கடைச்சல் வேலை நிலையம் வைத்திருத்தல்
17. புகையிலை தயாரித்தலும் களஞ்சியப்படுத்தலும்
18. சுண்ணாம்புக் கல் அல்லது சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
19. டயர், டியூப் ஒட்டு வேலை நிலையம் வைத்திருத்தல்
20. வளிச்சீராக்கி இயந்திரம், ஆழ்குளிரேற்றல் இயந்திரம் உற்பத்தி செய்தல், திருத்தம் செய்தல் மற்றும் சேவை செய்தல்
21. மரமல்லா தளபாடங்கள் உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்
22. தும்பு மற்றும் நார் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் உற்பத்தியும் விற்பனையும்
23. கொல்லன் கம்மாலை ஒன்று வைத்திருத்தல்
24. புகைப்படச் சட்டகம் தயாரித்தல்
25. குஷன் இடுதல் நிலையம் வைத்திருத்தல்

## கந்தளாய் பிரதேச சபை

வாகனங்களும் மிருகங்களும் தொடர்பான வரி அறவிடல் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147 மற்றும் 148 ஆவது பிரிவிற்கமைய கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய கந்தளாய் பிரதேச சபை 2021.10.26 ஆந் திகதிய முன்மொழிவு இலக்கம் 416 ஐக் கொண்ட முன்மொழிவுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறியத் தருகின்றேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

### தீர்மானம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147 மற்றும் 148 ஆம் பிரிவிற்கமைய கந்தளாய் பிரதேச சபையின் ஏதாவது இடத்தில் நடத்தப்பட்டு வரும் இங்கே கீழுள்ள அட்டவணை I ஆவது நிரலில் காண்பிக்கப்படும் ஏதாவது வாகனம் அல்லது மிருகமொன்றை தன்வசம் வைத்திருக்கும் அனைத்து ஆட்களினாலும் அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள வரியை 2022 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிட வேண்டுமெனவும்,

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் சட்டத்தின் 148 (3) ஆம் உபபிரிவின் படி உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய வரிக்கு உட்பட்ட சகல ஆட்களினாலும் குறித்த வரியினை 2022.04.30 ஆந் திகதிக்கு முன்பதாக கந்தளாய் பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும், ஆலோசனைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கின்றேன்.

### அட்டவணை

| I ஆம் பகுதி | II ஆம் பகுதி<br>ரூ. ச. |
|---|---|
| மோட்டார் வாகனம், மோட்டார் முச்சக்கரவண்டி, மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள், வண்டி, துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி, ஜின்ரிக்ஷா வண்டி அல்லாத சகல வாகனங்களுக்கும் | ரூ. 25.00 |
| சகல துவிச்சக்கரவண்டி அல்லது முச்சக்கரவண்டி அல்லது கார் அல்லது வண்டி | |
| (அ) வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் | 18.00 |
| (ஆ) வர்த்தக நோக்கம் அல்லாத காரணங்களிற்காக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் | 4.00 |
| ஒவ்வொரு வண்டிகளுக்கும் | 20.00 |
| ஒவ்வொரு கைவண்டிகளுக்கும் | 10.00 |
| ஒவ்வொரு ரிக்ஷாக்களுக்கும் | 7.00 |
| ஒவ்வொரு குதிரை வண்டி, கழுதை வண்டி, செம்மறி ஆட்டு வண்டி | 15.00 |
| சகல யானை சவாரி வண்டிக்கும் | 50.00 |

பரிதி அங்குலம் 26 இற்கும் மேற்படாத சக்கரம் கொண்ட சிறுவர் வாகனங்கள், வீல்பரோ, பெரும்பாலும் தனியார் இடங்களில் மட்டும் வர்த்தக நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படும் கைவண்டில் மற்றும் வர்த்தக நோக்கங்களிற்காக பயன்படுத்தாத கைவண்டில் இக்கொடுப்பனவிலிருந்து நீக்கப்படுகின்றது.

இந்த அட்டவணையில் வியாபார நோக்கத்திற்காக, விற்பனைக்காக அல்லது மறைமுகமாக அல்லது வேறேதும் வர்த்தக நோக்கத்திற்காக அல்லது தொழிலுக்காக ஏதேனும் பொருளொன்றை ஏதேனும் எழுத்து மூல அல்லது அச்சுப் பொருட்கள் எடுத்துச் செல்லல் அல்லது கொண்டு செல்லல் இதற்குள் உள்ளடக்கப்படும்.

*11-332/5*

---

## கந்தளாய் பிரதேச சபை

### பொழுது போக்கு வரி கட்டளைச் சட்டத்தின் கீழ் வரி விதித்தல் - 2022

1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுது போக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப் பெற்ற அதிகாரங்களின்படி கந்தளாய் பிரதேச சபையின் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல பொழுதுபோக்கு நடவடிக்கைகளிற்கும் கிடைக்கும் கட்டணத்தின் 10% பொழுதுபோக்கு வரியாக விதித்து அறவிடப்பட வேண்டும் எனும் முன்மொழிவு 2021.10.26 ஆந் திகதிய தீர்மான இலக்கம் 416 இன் கீழ், கீழ்க் குறிப்பிடப்படும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

### தீர்மானம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் அதிகாரங்களின் பிரகாரம் தயாரித்து 123 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஆளுநரின் அனுமதியின் கீழ் 2020.03.12 ஆம் திகதியுடைய 2166/19 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்காட்டப்பட்டுள்ள இடைநிலை பிரமாணங்கள் 2022 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கின்றேன்.

I. பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பந்தியின் VII ஆவது உபபிரிவின் (ஊ) தொடர் பிரிவின் பிரகாரம்,
- பிரச்சார அறிவித்தல் முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான இடைநிலை சட்டம்.

II. பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் IX உபபிரிவின் (ஈ) தொடர் பிரிவின் படி,
- உணவு விடுதி நடாத்துதல், ஒழுங்குபடுத்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்தல் தொடர்பான இடைநிலை சட்டம்.
- பேக்கரி நடாத்துதல், ஒழுங்குபடுத்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்தல் தொடர்பான இடைநிலை சட்டம்.

III. பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பந்தியின் IX ஆவது உபபிரிவின் (ஓ) தொடர் பிரிவின் பிரகாரம்,
- கஷ்டமான, ஆபத்தான வியாபாரம், இவற்றை ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல் தொடர்பான இடைநிலை சட்டம்.

IV. பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பந்தியின் XXIV வது உபபிரிவின் படி,
- தலைமுடி சரி செய்யும் இடம் மற்றும் அழகுபடுத்தும் நிலையம் நடாத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல் தொடர்பான இடைநிலை சட்டம்.

## கந்தளாய் பிரதேச சபை

### கட்டணம் அறவிடுதல் - 2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய கந்தளாய் பிரதேச சபைக்கு உரித்தாக்கப் பெற்ற அதிகாரங்களின்படி கந்தளாய் பிரதேச சபை 2021.10.26 ஆந் திகதிய ஆலோசனை இலக்கம் 416 ஐக் கொண்ட ஆலோசனையின் கீழ் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகிறேன்.

ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க,
தலைவர்,
கந்தளாய் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கந்தளாய்,
2021, ஒற்றோபர் 26.

### தீர்மானம்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவில் உரித்தளிக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின்படி கீழ் அட்டவணையில் நிரல் I இல் காட்டப்படும் ஏதாவது ஒரு செயற்பாட்டிற்காக அதிகாரமளித்து அவ் அட்டவணையின் II ஆவது நிரலின் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2022 ஆம் ஆண்டிற்காக அறவிடப்படல் வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றேன்.

### அட்டவணை

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட விடயங்கள் | | நிரல் II<br>கட்டணம் (ரூ.சதம்) |
|---|---|---|
| 01. | படிவங்கள் கட்டணம் மற்றும் நிர்வாக கட்டணம் | |
| (i) | வீதி எல்லை மற்றும் சொத்துக்களை உரித்தளிக்காமை சான்றிதழ் வழங்கும் கட்டணம் | 1,000.00 |
| (ii) | சேவைக் கட்டணம் (ஏடுகளைத் தேடல் மற்றும் புகைப்பட பிரதி எடுத்தல்) | 200.00 |
| (iii) | முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தலுக்கான வருடாந்த கட்டணம் | 1,000.00 |
| (iv) | கட்டட வரைபடங்கள் அனுமதிக்கும் விண்ணப்பப்படிவ கட்டணம் | 500.00 |
| (v) | நில அளவைத் திட்டம்/காணி பிரிப்பு அனுமதித்தலுக்கான விண்ணப்பப்பபடிவக் கட்டணம் | 250.00 |
| (vi) | கிணறு மலசலகூடம் வெட்டுதலுக்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 250.00 |
| (vii) | தொலைபேசிக் கோபுரம் (Tower) சேவைக் கட்டணம் | 20,000.00 |
| (viii) | துவிச்சக்கரவண்டி அனுமதிப்பத்திர நிர்வாகக் கட்டணம் | 50.00 |
| (ix) | மோட்டுவரி பதிவேட்டில் பெயர் மாற்றலுக்கான சேவைக்கட்டணம் | 100.00 |
| (x) | நூலக விண்ணப்பப்படிவக் கட்டணம் | |
| | • அங்கத்துவ கட்டணம் | 250.00 |
| | • தண்டனைப் பணம் (கட்டணம்) ஒரு புத்தகத்திற்கு ஒரு நாளைக்கு | 1.00 |
| | • புத்தகம் காணாமல் போனால் | |
| | அப்புத்தகத்தின் பெறுமதியின் இரண்டு மடங்கும் தபால் கட்டணம் ரூ. 75.00 அல்லது புத்தகத்தினை மீண்டும் பெற்றுக் கொள்ளல். | |
| (xi) | பெறுகை பத்திர கட்டணம் | 1,000.00 |
| (xii) | வியாபார வலுவூட்டல் சேவைக் கட்டணம் (ஒரு நாளைக்கு) | 1,000.00 |
| (xii) | தகனக்கிரிகைக் கட்டணம் | |
| | 01. ஒரு தகனக்கிரியைக்காக | 9,500.00 |
| | 02. சாம்பல் அகற்றாவிடின் | 10,000.00 |
| (xiv) | விளையாட்டு மைதானக் கட்டணம் | |
| | 01. லீலாரத்ன மைதானம் (1 நாள்) | 2,000.00 |
| | 02. ஏனைய மைதானம் (1 நாள்) | 1,000.00 |

02. பிரதேச சபைக்குரிய வாகனங்களை வாடகைக்கு விடல்

| வாகனம் | | விபரம் | | கட்டணம் (ரூ.சதம்) |
|---|---|---|---|---|
| (i) | ட்ரெக்டர் பவுசர் | 01 | நாளுக்கு | 1,000.00 |
| (ii) | ட்ரெக்டர் உடன் பவுசர் | 01 | நாளுக்கு | 4,500.00 |
| (iii) | பெரிய கல் ரோல் | 01 | நாளுக்கு | 10,000.00 |
| (iv) | மோட்டர் க்ரேடர் | 01 | மணித்தியாலத்திற்கு | 4,500.00 |
| (v) | கலி பவுசர் | 01 | ஒரு தடவைக்கு | 5,500.00 |
| | | | (அதிகரிக்கும் 1 கி. மீற்றருக்காக) | 200.00 |
| (vi) | டிப்பர் வாகனம் | 01 | நாளுக்கு | 5,000.00 |
| (vii) | மண் அழுத்தும் இயந்திரம் | 01 | நாளுக்கு | 2,000.00 |
| (viii) | சிறிய கல் ரோல் | 01 | நாளுக்கு | 3,750.00 |
| | | | (அதிகரிக்கும் 1 கி.மீற்றருக்காக) | 50.00 |
| (ix) | JCB இயந்திரம் | 01 | மணித்தியாலத்திற்கு | 3,500.00 |

03. பொதுச் சந்தை வாகன தரிப்பிடக் கட்டணம்

| | | |
|---|---|---|
| (i) | துவிச்சக்கர வண்டி | 10.00 |
| (ii) | மோட்டார் வண்டி | 20.00 |
| (iii) | முச்சக்கர வண்டி | 50.00 |
| (iv) | லொறி, பேருந்து, வேன், வேறு கனரக வாகனங்கள் | 100.00 |

04. பிரச்சார அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தலுக்கான கட்டண அறவீடு
தீர்மான இல. 321 திகதி 2020.10.15

| காலம் | தன்மை | | |
|---|---|---|---|
| | மரம், தகரம்,பிளாஸ்டிக் பைபர் (ரூ. சதம்) | துணி , டிஜிட்டல், பொலித்தீன் மற்றும் வேறு (ரூ.சதம்) | வைப்புப் பணம் (ஒரு பலகைக்கான (ரூ.சதம்) |
| 2 கிழமை அல்லது அதற்கு குறைவானது | 50.00 | 30.00 | 50.00 |
| 1மாதம் - 6 மாதங்கள் | 75.00 | 50.00 | 100.00 |
| 6 மாதங்கள் 1 வருடம் | 100.00 | 75.00 | 150.00 |
| 1 வருடம் - 2 வருடம் | 150.00 | 100.00 | 250.00 |

05. பிரதேச சபை பாதைகளுக்கூடாக நீர் வழங்குதலுக்கான கட்டண அறவீடு நீளம் ஒரு மீற்றருக்கு
தீர்மான இல. 92 திகதி 2018.09.20

| தொடர் இல. | வீதி | அறவீடு (ரூ.ச.) |
|---|---|---|
| 1. | கிரவல் | 675.00 |
| 2. | கொங்கிரீட் | 2,070.00 |
| 3. | தார் வீதி | 1,327.00 |
| 4. | காபட் | 2,066.66 |

06 நகர சபை மண்டபம் ஒதுக்குவதற்கான கட்டணம்
தீர்மான இல. 75 திகதி 2018.08.16

| நகரசபை மண்டப பிரிவு | விபரம் | அறவீடு (ரூ.ச.) |
|---|---|---|
| மேல் மாடி பார்வையாளர் மண்டபம் | முன்பள்ளி விழா - ஒரு நாளைக்கு | 10,000.00 |
| | அரச நிறுவன பொதுவான செயற்பாடு (1 நாள்) | 20,000.00 |
| கீழ் மாடி விழா மண்டபம் | சகல வித செயற்பாடுகள் - ஒரு நாளைக்கு | 30,000.00 |
| கீழ் மாடி சிறிய கூட்ட மண்டபம் | சகல வித செயற்பாடுகள் - ஒரு நாளைக்கு | 10,000.00 |
| அறைகள் | ஒரு நபருக்கான - கட்டணம் | 1,000.00 |
| | இரு நபர்களுக்கான கட்டணம் | 1,500.00 |
| | மூன்று அல்லது நான்கு நபர்களுக்கான கட்டணம் | 2,000.00 |

06. தீர்மான இலக்கம் 253 (திருத்தியமைக்கப்பட்ட தீர்மான இலக்கம் -75)
திகதி 2020.01.23

| நகரசபை மண்டப பிரிவு | விபரம் | அறவீடு (ரூ.ச.) |
|---|---|---|
| மேல் மாடி பார்வையாளர் மண்டபம் | முன்பள்ளி அரச சார்பற்ற நிறுவனங்களின் செற்பாடுகள் (ஒரு நாளைக்கு) | 30,000.00 |
| | முன் பயிற்சி செயற்பாடுகள் உயர்ந்த பட்சம் 04 மணித்தியாலங்கள் | 5,000.00 |

07. பேரமடுவ சமுதாய நீர் திட்டத்திற்காக நீர்க் கட்டண அறவீடு
தீர்மான இல. 150 திகதி 2019.01.17

முன்மொழியப்பட்ட நுகர்வோர் நீர்க்கட்டணப் பதிவேடு

| அலகு | நிலையான கட்டணம் (ரூ.ச.) | நீர் நுகர்வுக் கட்டணம் (ரூ.ச.) | அறவிட தீர்மானிக்கப்பட்ட முழுக்கட்டணம் (ரூ.) (1+2) | அலகு | நிலையான கட்டணம் (ரூ.ச.) | நீர் நுகர்வுக் கட்டணம் (ரூ.ச.) | அறவிட தீர்மானிக்கப்பட்ட முழுக் கட்டணம் (ரூ.) (1+2) |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 100 | 0 | 100 | 26 | 100 | 630 | 730 |
| 1 | 100 | 20 | 120 | 27 | 100 | 660 | 760 |
| 2 | 100 | 40 | 140 | 28 | 100 | 690 | 790 |
| 3 | 100 | 60 | 160 | 29 | 100 | 720 | 820 |
| 4 | 100 | 80 | 180 | 30 | 100 | 750 | 850 |
| 5 | 100 | 100 | 200 | 31 | 100 | 790 | 890 |
| 6 | 100 | 120 | 220 | 32 | 100 | 830 | 930 |
| 7 | 100 | 140 | 240 | 33 | 100 | 870 | 970 |

| அலகு | நிலையான கட்டணம் (ரூ.ச.) | நீர் நுகர்வுக் கட்டணம் (ரூ.ச.) | அறவிட தீர்மானிக்கப்பட்ட முழுக்கட்டணம் (ரூ.) (1+2) | அலகு | நிலையான கட்டணம் (ரூ.ச.) | நீர் நுகர்வுக் கட்டணம் (ரூ.ச.) | அறவிட தீர்மானிக்கப்பட்ட முழுக் கட்டணம் (ரூ.) (1+2) |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 100 | 160 | 260 | 34 | 100 | 910 | 1010 |
| 9 | 100 | 180 | 280 | 35 | 100 | 950 | 1050 |
| 10 | 100 | 200 | 300 | 36 | 100 | 990 | 1090 |
| 11 | 100 | 225 | 325 | 37 | 100 | 1030 | 1130 |
| 12 | 100 | 250 | 350 | 38 | 100 | 1070 | 1170 |
| 13 | 100 | 275 | 375 | 39 | 100 | 1110 | 1210 |
| 14 | 100 | 300 | 400 | 40 | 100 | 1150 | 1250 |
| 15 | 100 | 325 | 425 | 41 | 100 | 1200 | 1300 |
| 16 | 100 | 350 | 450 | 42 | 100 | 1250 | 1350 |
| 17 | 100 | 375 | 475 | 43 | 100 | 1300 | 1400 |
| 18 | 100 | 400 | 500 | 44 | 100 | 1350 | 1450 |
| 19 | 100 | 425 | 525 | 45 | 100 | 1400 | 1500 |
| 20 | 100 | 450 | 550 | 46 | 100 | 1450 | 1550 |
| 21 | 100 | 480 | 580 | 47 | 100 | 1500 | 1600 |
| 22 | 100 | 510 | 610 | 48 | 100 | 1550 | 1650 |
| 23 | 100 | 540 | 640 | 49 | 100 | 1600 | 1700 |
| 24 | 100 | 570 | 670 | 50 | 100 | 1650 | 1750 |
| 25 | 100 | 600 | 700 | | | | |

11-332/7

---

## கெபிதிகொல்லேவ பிரதேச சபை

அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்தல் -2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் கெபிதிகொல்லேவ பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபை கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

பி. எம். டிகிரிபண்டா,
தலைவர்,
கெபிதிகொல்லேவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கெபிதிகொல்லேவ,
2021, ஒகத்து 31.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் கெபிதிகொல்லேவ பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் அல்லது குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துணை உறுப்புரையில் விபரிக்கப்பட்டுள்ள இங்கு கீழ் அட்டவணையில் I ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் ஒரு விடயத்திற்காக கெபிதிகொல்லேவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு இடத்தை அல்லது வளவை பாவிப்பதற்கு அனுமதி வழங்கி 2022 ஆம் ஆண்டுக்கு வழங்கப்படுகின்ற ஏதும் ஒரு அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அந்த அட்டவணையின் II ஆம் பிரிவில் உள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரக் கட்டணத்தை 2022 ஆம் ஆண்டுக்கு நியமிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும் குறிப்பிட்ட ஒரு இடத்தை அல்லது வளவை 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாசப் பிரயாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிடமாக அமையுமாயின் அதற்காக அனுமதிப்

பத்திரம் வழங்கப்படும் போது அந்த இடத்தின் அல்லது வளவின் 2021 ஆம் ஆண்டின் கிடைத்த வருமானத்தின் நூ ற்றுக்கு ஒரு சத வீத (1%) அளவை அனுமதிப் பத்திரக் கட்டணமாக 2022 ஆண்டின் நியமித்து அறவிடப்படுதல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| தங்கும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| சோற்றுக் கடை ஒன்றை நடாத்திச் செல்ல | 500.00 | 750.00 | 1000.00 |
| உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| தேநீர் கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| கோப்பி கடை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| பேக்கரி ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| பால் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| பால் விற்பனை செய்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| மீன் விற்பனை செய்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| இறைச்சி விற்பனை செய்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| ஐஸ் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| குளிர்பான தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| லொன்டறி ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| மாட்டுப் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| தனியார் வர்த்தக சந்தை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| தலை மயிர் அலங்காரம் செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| சவரத் தொழில் செய்யும் இடத்தை நடாத்திச் செல்லுவதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| கால் நடைகளை அறுக்கும் இடத்தை நடாத்திச் செல்லுவதற்கு | 500.00 | 750.00 | 1000.00 |

11-777/1

---

**கெபிதிகொல்லேவ பிரதேச சபை**

கைத் தொழில்களுக்கு வரி விதித்தல் -2022

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின் மூலம் கெபிதிகொல்லேவ பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபை கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானம் சபையினால் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

பி. எம். டி.கிரிபண்டா,
தலைவர்,
கெபிதிகொல்லேவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கெபிதிகொல்லேவ,
2021, ஒகத்து 31.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் உடைய பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் மூலம் கெபிதிகொல்லேவ பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கெபிதிகொல்லேவை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதும் ஒரு வளவில் நடாத்திச் செல்லப்படுகின்ற இங்கு I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கைத்தொழில்கள் சம்பந்தமாக அந்த வட்டவணையின் II ஆம் பிரிவில் பொருத்தமான பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவினதான கைத்தொழில் வரியை 2022 ஆம் ஆண்டிற்கு நியமித்து அறவிடப்படுதல் வேண்டும் என்று இத்தால் நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை I**

| நிரல் I<br>கைத்தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| கடிகாரங்கள் பழுது பார்க்கும் இடத்துக்கு | 500.00 | 750.00 | 1000.00 |
| வானொலி /தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுது பார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| கொன்கிறீட் கற்கள் அல்லது, சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| தாவரச் செடிகள் நாற்று மேடை மற்றும் வினியோகம் | 500.00 | 750.00 | 1000.00 |
| அலங்கார மலர்ச்செடி வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| இனிப்புப் பண்டங்கள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| வாசனைத் பொருட்கள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| யோகட் உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| காளான் உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| வலைகள் உபகரணங்கள் விற்பனைசெய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |



---

**கெபிதிகொல்லேவ பிரதேச சபை**

வர்த்தகங்களுக்கு வரி விதித்தல் -2022

